பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

19 09 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு விதிகள் விரைவில் வெளியிடப்படும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. எரிசக்திப் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. முந்தைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல நலத் திட்டங்களை திமுக அரசு கைவிட்டுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. தமிழகத்தில் 5 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு விதிகள் விரைவில் வெளியிடப்படும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான 2 நாள் உச்சிமாநாடு புதுதில்லியில் நடைபெறவுள்ளதை ஒட்டி அதற்கான அறிமுக நிகழ்ச்சியில் நேற்று அவர் உரையாற்றினார்.

தனிநபர் தரவுப் பாதுகாப்பு தொடர்பான சட்டம் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்வதாக அவர் கூறினார்.

இணையதள விளையாட்டுகள் தொடர்பான புதிய விதிகள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின் கீழ் நாடு முழுவதும் 500 தரவு ஆய்வகங்கள் அமைக்கப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

எரிசக்திப் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற எரிசக்தி பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், புதைபடிம எரிபொருள் சார்பு நிலையை குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பசுமை ஹைட்ரஜன், எரிசக்தி துறையில் எதிர்காலத்தில் முக்கிய எரிபொருளாக திகழும் என்று திரு. ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<>>>>

பொய்ச் செய்திகள் பரவுவதை தடுக்க இந்திய தகவல் பணி அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி வலியுறுத்தியுள்ளார்.

இந்திய தகவல் பணி பயிற்சி அதிகாரிகளிடையே சென்னை நேற்று அவர் கலந்துரையாடினார்.

தவறான செய்திகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை குறைத்து அதிருப்தியை ஏற்படுத்தும் என்றார்.

இதைத் தடுப்பது சவாலான பணி என்று கூறிய அவர், இதில் இந்திய தகவல் பணி அதிகாரிகள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று திரு. ஆர்.என். ரவி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் CPCL நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரண்களை வழங்கி அவர் பேசினார்.

மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் மாநிலம் முழுவதும் 800க்கும் மேற்பட்ட தாழ்தளப் பேருந்துகள் இயக்கப்படுவதாக அவர் கூறினார்.

சென்னை மெரீனா கடற்கரையைப் போலவே திருவான்மியூர் மற்றும் வேளாங்கன்னியில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு நடைபாதைகள் விரைவில் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

முந்தைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல நலத் திட்டங்களை திமுக அரசு கைவிட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் அயோத்தியாபட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தாலிக்கு தங்கம், அம்மா மினி கிளிக்குகள், குடிமராமத்து திட்டம் போன்றவற்றால் மாநில மக்களுக்கு மிகப்பெரிய பயன் கிடைத்ததாக கூறினார்.

திமுக அரசு இத்திட்டங்களை கைவிட்டுள்ளதாகவும், அஇஅதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இவை மீண்டும் செயல்படுத்தப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

பிரபல நடிகர் ரோபோ சங்கர் உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 46.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தனித்துவம் மிக்க நகைச்சுவைத் திறன் மூலமாகவும், குணச்சித்திர வேடங்கள் மூலமாகவும் ரோபோ சங்கர் புகழ்பெற்று விளங்கியதாவும், அவரது மறைவு அதிர்ச்சியளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோரும் ரோபோ சங்கரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இயற்கை வேளாண்மையில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் கூறியுள்ளார்.

மத்திய அரசின் அங்கக சான்றளிப்பு திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கிப் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

(Voice Byte - Prathap - 35 Sec)

<<<<>>>>

இனி மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்..

(Tune- 7 Sec)

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது மகளிர் மேம்பாட்டுக்கான திட்டங்கள்.

*மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக மகளிரின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*

*மகளிர் சக்தி தேசிய இயக்கமாக உருவெடுத்துள்ளது. ஒவ்வொரு மகளிரும் அதிகாரம் பெற வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு இந்த இயக்கம் செயல்படுகிறது.*

*கண்ணியமாகவும், பாதுகாப்பாகவும், சுயசார்பாகவும், பெண்கள் வாழ்வதை உறுதி செய்வதற்கு ஏதுவான சட்ட பாதுகாப்பையும் மத்திய அரசு வழங்கியுள்ளது.*

*இதற்கான வரலாற்று சிறப்புமிக்க சட்டங்களையும் மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. மகளிருக்கு என ஆயுள் காப்பீட்டுத்திட்டத்தை கடந்த ஆண்டு*

*டிசம்பர் மாதம் ஹரியானாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்து உரையாற்றினார்.*

*(சவுண்ட் பைட் - மோடி தமிழ் - செகண்ட்ஸ்)*

*பெண் குழந்தைகளை காப்போம்- அவர்களுக்கு கற்பிப்போம் திட்டம் பெரிய அளவிலான பயன்களை தந்துள்ளது. இந்த திட்டம் காரணமாக தேசிய அளவில் 918 ஆக இருந்த பெண் பாலின விகிதம் கடந்த 2023-24 ஆம் ஆண்டு நிதியாண்டில் 930 ஆக அதிகரித்தது. லட்சாதிபதி சகோதரி திட்டம் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களின் வருவாய் வருடத்திற்கு ஒரு லட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது.*

*கடந்த 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட செல்வமகள் சேமிப்புத் திட்டம் இளம் பெண்களின் மேம்பாட்டிற்கான வரப்பிரசாதமாக அமைந்தது என்றால் மிகையல்ல.*

*இந்த திட்டம் தமது மகளின் எதிர்காலத்தை உறுதி செய்துள்ளதாக கூறுகிறார் வேலூரை சேர்ந்த பயனாளி திருமதி மதுமிதா*

*(சவுண்ட் பைட் – பயனாளி – செகண்ட்ஸ்)*

*மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் காரணமாக, பாதுகாப்பு, சிவில் விமான போக்குவரத்து என அனைத்து துறைகளிலும் பெண்கள் தற்போது முத்திரை பதித்து வருகின்றனர்.*

(Closing Signature Tune - 7 Sec)

**<<<<>>>>**

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய 5 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சிவகங்கை, ஈரோடு, திருப்பத்தூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நேற்றிரவு பரவலாக கனமழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

## *இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவில் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் பிரதமர் திரு. Keir Starmer அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்-ஐ சந்தித்து பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் நார்வே நிறுவனங்கள் 100 பில்லியன் டாலர் அளவுக்கு முதலீடுகளை மேற்கொள்ளும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக நாடு முழுவதும் ஆயிரத்து 799 கருத்தரங்குகளை நடத்தியுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மதுரையில் இன்று நடைபெறும் உணவு தானிய வணிகர்கள் சங்கக் கூட்டத்தில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் மேம்பாடு தொடர்பான ஆய்வுக் கூட்டம் புதுதில்லியில் மத்திய நிதி சேவைகள் துறை செயலாளர் திரு. நாகராஜு தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

திருநெல்வேலி-சென்னை இடையேயான வந்தேபாரத் ரயிலில் வரும் 24ஆம் தேதி முதல் கூடுதலாக 4 பெட்டிகள் இணைக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

## *விளையாட்டுச் செய்தி*

ப்ரோ கபடி லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஜெய்ப்பூர் அணி - பெங்கால் அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் புனே அணி - மும்பை அணியை வென்றது.

<<<<>>>>

மாவட்டங்களுக்கு இடையேயான ஜூனியர் தடகளப் போட்டி சென்னை தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இன்று தொடங்குகிறது.

<<<<The End>>>>